RNI-N0: TNTAM/2021/83936





# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025





சிவகங்கை | மலர்-5 | இதழ்- 27 | பிப்ரவரி.3 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# “இப்போதும் அண்ணா வழியில் அயராது உழைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்” : மு.க.ஸ்டாலின்

சென்னை: பிப்.3-

“இந்திக்கு இடமில்லை என்று இருமொழிக் கொள்கையை அண்ணா நிலைநாட்டிய மாநிலத்தில், இந்தியுடன் சமஸ்கிருதத்தையும் திணிக்கும் முயற்சியில் தீவிரமாக இருக்கிறது ஒன்றிய பாஜக அரசு. தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பாஜக அரசுக்குச் சாமரம் வீசும் அடிமையாக இருக்கிறது அண்ணாவின் பெயரை கட்சியில் வைத்திருக்கும் அதிமுக.

எனவே, இப்போதும் நாம் அண்ணா வழியில் அயராது உழைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.” என்று திமுக தொண்டர்களுக்கு அக்கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக மு.க.ஸ்டாலின் தனது கடிதத்தில் கூறியிருப்பதாவது: உங்களில் ஒருவனான என்னுடைய இந்தப் பயணத்திற்கும் ஓயாத உழைப்பிற்கும் உந்து விசையாக இருப்பவர்கள் அண்ணாவும், கலைஞரும், பேராசிரியர் அன்பழகன் உள்ளிட்ட கழகத்தின் முன்னோடிகள்தான்.

அதனால்தான் எதிர்ப்புகளையும் வஞ்சகத்தையும் எதிர்கொள்ளும் போராட்டமாகவே முதலமைச்சர் பொறுப்பை அனுபவித்தபடி, தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கு உழைத்து வருகிறேன். உடன்பிறப்புகளான உங்களின் ஆதரவே என்னுடைய வலிமை.

1967ல் தொடங்கி, 2026ல் இன்று நடைபெறுகிற திராவிட மாடல் அரசு வரை, அண்ணா வகுத்துத் தந்த திராவிடப் பாதையைப் பின்பற்றியே ஆட்சி நிர்வாகத்தை நடத்தி வருகிறோம்.

நம்மை எதிர்ப்பவர்கள் ஆட்சிக்கு வந்தபோதும், அண்ணாவின் பெயரைத்தான்



உச்சரிக்க வேண்டியிருந்தது. அதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பேரியக்கத்தின் கொள்கைக்கான வெற்றி.

இப்போதும் நாம் அண்ணா வழியில் அயராது உழைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இந்திக்கு இடமில்லை என்று இருமொழிக் கொள்கையை அண்ணா நிலைநாட்டிய மாநிலத்தில், இந்தியுடன் சமஸ்கிருதத்தையும் திணிக்கும் முயற்சியில் தீவிரமாக இருக்கிறது ஒன்றிய பாஜக அரசு. தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பாஜக அரசுக்குச் சாமரம் வீசும் அடிமையாக இருக்கிறது அண்ணாவின் பெயரை கட்சியில் வைத்திருக்கும் அதிமுக.

வன்முறை தவிர்த்து வறுமையை வெல்ல வேண்டிய மண்ணில், எந்த வகையில் மத வன்முறையைத் தூண்டலாம் என்பதே பாஜகவின் நோக்கமாக உள்ளது. அதற்கு மவுன சாட்சியாக அமைதி காக்கிறது அதிமுக.

மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்பதைத் திராவிட மாடல் அரசு தனது ஒவ்வொரு செயல்பாட்டிலும் ஒன்றிய பாஜக அரசுக்கு உணர்த்திக் கொண்டே இருக்கிறது. திராவிட மாடலின் குரல், பாஜக ஆட்சியில் இல்லாத மற்ற மாநிலங்களிலும் ஒலிக்கிறது. மாநில சுயாட்சி என்றாலே பயந்து ஒளிந்து கொள்கிறது, சுயாட்சி எண்ணமோ சுயமரியாதை உணர்வோ இல்லாத அதிமுக.

மக்களிடம் செல் என்று அண்ணா சொன்னது போல, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இல்லாத கொரோனா காலத்திலும் மக்களிடம் சென்றது, ஆட்சியில் மகத்தான திட்டங்களை செயல்படுத்தும் இந்த ஐந்தாண்டுகளிலும் மக்களுடனேயே பயணிக்கிறது.

மக்களுக்காகவே செயல்படுகிற மக்கள் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தை 2026 சட்டமன்றத் தேர்தலிலும் வெற்றி பெற வைத்து, திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைத்திட வேண்டும் என்ற எண்ணம் தமிழ்நாட்டு மக்களின் மனதில் பதிந்துள்ளது.

தமிழ்நாட்டிற்கு வஞ்சகம் செய்து வரும், தமிழர்களின் எதிரியான பாஜகவும் அதனுடன் இணைந்துள்ள அதிமுகவும் நமக்கு எதிராகச் செயல்படுவதாக நினைத்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை மீண்டும் படுகுழியில் தள்ள நினைக்கும் சதியை, அண்ணாவின் தம்பிகளான கலைஞரின் உடன்பிறப்புகளான உங்களால்தான் முறியடித்திட முடியும்.

அந்த உறுதியை ஏற்கும் வகையில், பிப்ரவரி 3 அன்று அண்ணா நினைவு நாளில் அண்ணா சதுக்கம் நோக்கி அமைதிப் பேரணியில் உங்களில் ஒருவனான நானும் கழக முன்னோடிகளும் கழகத் தொண்டர்களும் பங்கேற்கிறோம்.

என்றென்றும் நம் நெஞ்சில் நிறைந்திருக்கும் அண்ணாவின் நினைவு நாளில் தமிழ்நாடெங்கும் அவரது நினைவைப் போற்றும் வகையில் கழகக் கிளைகள் தோறும் அண்ணாவின் படத்திற்கு மாலையிட்டு, மலர் தூவி மரியாதை செலுத்தி, கலைஞர் வழங்கிய ஐம்பெரும் முழக்கங்களை உறுதிமொழியாக ஏற்று, தேர்தல் களப்பணிகளுக்கு ஆயத்தமாவோம்.

அண்ணா வழியில் அயராது உழைப்போம். மக்களிடம் செல்வோம். அவர்களின் ஆதரவுடன் சட்டமன்றத் தேர்தலில் உறுதியாக வெல்வோம். இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# “தவெக சென்று செங்கோட்டையன் செல்லாக்காசு ஆகிவிட்டார்!” செல்லூர் ராஜு

மதுரை: பிப்.3-

‘‘யாரும் ஏற்றுக் கொள்ளாததால் செங்கோட்டையன் தவெகவுக்குச் சென்றுள்ளார். அவர் செல்லாக்காசு, திருவிழாவில் காணாமல் போன ஆடாக நாங்கள் கருதுகிறோம்’’ என்று அதிமுக முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜு தெரிவித்தார்.



மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய செல்லூர் ராஜு, ‘‘ கருத்துக் கணிப்புகள் தற்போது அதிமுகவுக்கு சாதகமாக வருகிறது. இந்த கருத்துக் கணிப்புகளை பார்த்து திமுக கலக்கமடைந்துள்ளது.

திமுக தனது கூட்டணிக் கட்சிகளை அடிமைபோல் வைத்துள்ளது. மக்கள் பிரச்சினைகளைப் பற்றி வாய் திறக்காமல் உள்ளனர். பாஜக கூட்டணியில் திமுக இருந்தபோது அவர்கள் சொன்னதையெல்லாம் நிறைவேற்றினார்கள்.

மதுரை மெட்ரோ ரயில் திட்டம் சொதப்பலுக்கு தமிழக அரசே முக்கிய காரணம். வழித்தடம், எத்தனை இடங்களில் ஸ்டேஷன், எத்தனை லட்சம் பேர் பயன்பட போகிறார்கள் என்பது போன்ற புள்ளி விவரங்களை கொடுக்கவில்லை. மத்திய அரசு அதற்கான விளக்கம் கேட்டுதான் கடிதம் அனுப்பினார்கள். ஆனால், அதற்குள் ரத்து செய்ததாக திமுகவினர் வதந்திகளை பரப்பினார்கள்.

செங்கோட்டையன் செல்லாக் காசு ஆகிவிட்டார். அவரது பேச்சை பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அவரை எந்தக் கட்சியும் ஏற்றுக் கொள்ளாததால் வேறு வழியில்லாமல் தவெகவுக்குச் சென்றுள்ளார்.

அதிமுகவில் தொண்டனுடைய ரதத்தத்தையெல்லாம் உறிஞ்சிவிட்டு, சுகத்தை அனுப்பவித்துவிட்டு மாற்றுக் கட்சிகளுக்கு செல்வோரை பற்றி நாங்கள் கவலைப்பட மாட்டோம்.

ஊர் திருவிழாவில் காணாமல் போன ஆட்டை நாங்கள் தேடுவதில்லை. உடனே செங்கோட்டையனை செல்லூர் ராஜு சாடல் என்று போட்டுவிடுவீர்கள். அவரையும், என்னையும் வைத்து கார்ட்டூன் போட்டுவிடுகிறீர்கள். சும்மா விடுங்க சார்’’ என்றார்.

# அன்புமணிக்கு மாம்பழ சின்னம்: தேர்தல் ஆணையம் பதிலளிக்க ஐகோர்ட் 3 வாரம் அவகாசம்

சென்னை: பிப்.3-

பாமகவுக்கு மாம்பழ சின்னம் ஒதுக்கீடு செய்து, அன்புமணிக்கு தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்பியதை எதிர்த்து கட்சி நிறுவனர் ராமதாஸ் தாக்கல் செய்த வழக்கில், தேர்தல் ஆணையம் பதிலளிக்க 3 வாரம் அவகாசம் வழங்கி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சியின் உரிமை தொடர்பாக தலைவர் அன்புமணிக்கும், நிறுவனர் ராமதாஸுக்கும் இடையில் மோதல் நடந்து வரும் சூழலில், கட்சிக்கு மாம்பழ சின்னம் ஒதுக்கீடு செய்துள்ளதாக, தேர்தல் ஆணையம், அன்புமணி முகவரிக்கு கடிதம் அனுப்பியிருந்தது.

இந்த கடிதத்தை ரத்து செய்து, தனது முகவரிக்கு கடிதம் அனுப்ப உத்தரவிடக் கோரியும், கட்சி நிறுவனர் ராமதாஸ் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், கடந்த 2025 மே மாதமே பதவிக்காலம் முடிந்த நிலையில், கட்சியின் தலைவராக நீடிப்பதாக போலி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாக அன்புமணி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கட்சி நிறுவனர் என்ற முறையில் தனது அங்கீகாரம் இல்லாமல், சட்டவிரோதமாக கட்சி கூட்டங்களை நடத்தி அன்புமணி உரிமை கோர முடியாது எனவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ள அன்புமணிக்கு தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்பியிருக்க கூடாது என்றும், சின்னம் ஒதுக்கீடு தொடராக தனக்கு தான் கடிதம் அனுப்பியிருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், டெல்லி உயர்நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம், மாம்பழ சின்னத்தை யாருக்கும் ஒதுக்காமல் முடக்கும் என உத்தரவாதம் அளித்திருந்தது. ஆனால் இதுநாள் வரை சின்னத்தை முடக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில், இன்று (பிப்ரவரி 2) விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை விசாரித்த அவர்கள், தேர்தல் ஆணையம் பதிலளிக்க 3 வாரம் அவகாசம் வழங்கி உத்தரவிட்டனர்.

# கலைத்திருவிழா போட்டிகளில் அரசு பள்ளியில் பயிலும் மாணவன் முதன் முறையாக கலையரசன் விருது பெற்று சாதனை




சிவகங்கை, பிப்.3-

பள்ளிக் கல்வித்துறை மூலம் கலைத்திருவிழா போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு நடத்தப்பட்டு வருகிறது. இக்கல்வியாண்டில் இப்போட்டிகள் பள்ளிஅளவில் ,வட்டார அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவிலும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. மாநில அளவில் சிவகங்கை மாவட்டத்திலிருந்து 61 மாணவமாணவிகள் வெற்றி பெற்றனர்.முதல் இடம் 20 மாணவர்களும், இரண்டாம் இடம் 28 மாணவர்களும் மற்றும் மூன்றாம் இடம் 13 மாணவர்களும் பரிசு பெற்றுள்ளனர். மாநிலஅளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா 30.1.2026 அன்று சென்னை. கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் நடைபெற்றது.

| வ.எண் | பள்ளியின் பெயர் | மாணவனின் பெயர் | முதல் இடம் பெற்ற போட்டியின் பெயர் |
|---|---|---|---|
| 1 | தே. ஊ. ஒ. தொ. பள்ளி, தானாவயல் | தரணிதர்.வி | மாறுவேடப் போட்டி |
| 2 | புனித மரியன்னை நடுநிலைப்பள்ளி சாலைக்கிராமம் | ஆ. வேத நடாலினா | களிமண் பொம்மைகள் செய்தல் |
| 3 | ஊ ஒ தொ பள்ளி, காளையார் கோவில் கிழக்கு | மெகந்திஹா வீ | பரத நாட்டியம் (குழு |
| 4 | ஊ ஒ தொ பள்ளி, காளையார் கோவில் கிழக்கு | சௌந்தர்யா ம | பரத நாட்டியம் (குழு |
| 5 | ஊ ஒ தொ பள்ளி, காளையார் கோவில் கிழக்கு | கனிஷ்கா ஸ்ரீ க | பரத நாட்டியம் (குழு |
| 6 | ஊ ஒ தொ பள்ளி, காளையார் கோவில் கிழக்கு | கலைபாலா பெ | பரத நாட்டியம் (குழு |
| 7 | ஊ ஒ தொ பள்ளி, காளையார் கோவில் கிழக்கு | அபிராஹரினி ப | பரத நாட்டியம் (குழு |
| 8 | ஊ ஒ தொ பள்ளி, காளையார் கோவில் கிழக்கு | மது மித்ரா செ | பரத நாட்டியம் (குழு |
| 9 | ஊ ஒ தொ பள்ளி, காளையார் கோவில் கிழக்கு | சுஹாசினி ர | பரத நாட்டியம் (குழு |
| 10 | ஊ ஒ தொ பள்ளி, காளையார் கோவில் கிழக்கு | ஜெயஸ்ரீ த | பரத நாட்டியம் (குழு |
| 11 | ஊ ஒ தொ பள்ளி, காளையார் கோவில் கிழக்கு | அஹாசியா ரா | பரத நாட்டியம் (குழு |
| 12 | அரசு உயர்நிலைப் பள்ளி, இலுப்பைக்குடி (காரைக்குடி). | ஜெய்ராகவன் வெ | பாவனை நடிப்பு (Miming) - தனி |
| 13 | இராமநாதன் செட்டியார் நகராட்சி உயர் நிலைப் பள்ளி , காரைக்குடி . | திக் விஜய் ஹரி ச | கிட்டார் (Guitar)/ மாண்டலின் (Mandolin) |
| 14 | அரசு உயர்நிலைப் பள்ளி, இலுப்பைக்குடி (காரைக்குடி). | தமிழமுதன் ரா | பாவனை நடிப்பு (Miming) - தனி |
| 15 | அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளி, காரைக்குடி | கோகிலவதனி மூ | இலக்கிய நாடகம் - குழு |
| 16 | அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளி, காரைக்குடி | கௌதம் ரா | இலக்கிய நாடகம் - குழு |
| 17 | அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளி, காரைக்குடி | கபிலன் மா | இலக்கிய நாடகம் - குழு |
| 18 | அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளி, காரைக்குடி | பிரிதிவிராஜ் ச | இலக்கிய நாடகம் - குழு |
| 19 | அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளி, காரைக்குடி | வைஷாலினி கு | இலக்கிய நாடகம் - குழு |
| 20 | ஊ.ஒ.தொ.ப சின்னவடகுடிப்பட்டி | ஆசினி அ | வண்ணம் தீட்டுதல்(CWSN) |

இவ்விழாவிற்கு, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தலைமையேற்று, மாநிலஅளவிலான கலைத் திருவிழாப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார். இவ்விழாவில், இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு. திரு. பி.கே. சேகர் பாபு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திரு.திண்டுக்கல் ஐ. லியோனி பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். ஆகியோர் இவ்விழாவில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர், மருத்துவர். மா. ஆர்த்தி இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

இதில் குறிப்பாக, மாநில அளவில் கலைத்திருவிழாப் போட்டிகளில் சிறப்பான பங்களிப்பை அளித்த மாணவ,மாணவிகளுக்கு கலையரசன் மற்றும் கலையரசி பட்டங்கள் வழங்கப்படும். இக்கல்வியாண்டில் வழங்கப்பட்டகலையரசன் விருதினை மாநில அளவில் கிட்டார் வாசித்தல் போட்டியில் முதல் இடமும் மற்றும் புல்லாங்குழல் இசைக் கருவி வாசித்தல் போட்டியில் இரண்டாம் இடமும் பெற்றமைக்காக காரைக்குடி இராமநாதன் செட்டியார் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் பயிலும் திக் விஜய் ஹரி என்பாருக்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

கடந்த நான்கு ஆண்டுகளாக நடைபெறும் கலைத்திருவிழாப் போட்டிகளில் முதன் முறையாக கடந்த ஆண்டில் சிவகங்கை மாவட்டத்தில் "கலையரசி" பட்டத்தினை கோட்டையூர் சிதம்பரம் செட்டியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயின்ற 9ஆம் வகுப்பு மாணவி லேனா பெற்றதே சாதனையாக இருந்தது. அம்மாணவியும் அரசு உதவி பெறும் பள்ளியில் பயிலும் மாணவி ஆவார்.

இதுநாள்வரை சிவகங்கை மாவட்டத்தில் அரசு பள்ளியில் பயிலும் மாணவர் எவரும் கலையரசன் மற்றும் கலையரசி பட்டங்கள் பெற்றதே இல்லை என்ற நிலைதான் இருந்தது. அந்நிலையை மாற்றி இக்கல்வியாண்டில் நமது மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர் திக் விஜய் ஹரி கலையரசன் விருதினை பெற்றது மிகவும் பெருமைக்குரியதாகும். இச்சாதனையினை பெறுவதற்கு உறுதுணையாக இருந்து அம்மாணவனை ஊக்கப்படுத்திய பள்ளித் தலைமையாசிரியை, ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் சிவகங்கை மாவட்ட பள்ளிக்கல்வித் துறையின் சார்பாக பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டன. மேலும், இவ்விழாவில் மாநில அளவில் கலைத்திருவிழா போட்டிகளில் முதல் இடம் பெற்ற கீழக்காணும் பள்ளிகளில் பயிலும் 20 மாணவர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

மாநில அளவிலான கலைத்திருவிழாப் போட்டிகளில் விருது பெற்ற அனைவருக்கும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் மதிப்புமிகு. திருமதி.கா.பொற்கொடி மற்றும் சிவகங்கை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு. பாலதண்டாயுதபாணி ஆகியோர் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.




■ தஞ்சாவூர் வல்லம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இன்று பள்ளி மாணவர்களுக்கு இன்று சைக்கிள் வழங்கும் நிகழ்வில் தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் திரு TKG.நீலமேகம் MLA அவர்கள் கலந்து கொண்டு பள்ளி மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கினார்கள். இந்நிகழ்வில் தஞ்சை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் திரு S.செல்வகுமார், வல்லம் பேரூர் கழக செயலாளர் TKSG.கல்யாண சுந்தரம் திரு மாணிக்கம், திரு மனோகரன், திரு கலியமூர்த்தி திரு வெங்கடேசன் மணிராஜ் திரு வெங்கடேஷ் உள்ளிட்ட பேரூர் கழக நிர்வாகிகளும் தலைமை ஆசிரியர் உட்பட பள்ளி ஆசிரியர்கள் உடன் கலந்து கொண்டனர்.



## குமகிரி மலையில் ஸ்ரீ சண்முகநாதர் கோவிலில் தைப்பூஜை தேர் திருவிழா - பக்தர்கள் திரளான பங்கேற்பு, மாபெரும் அன்னதானம்

கிருஷ்ணகிரி, பிப்.03-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அருகே செட்டிமாரன்பட்டி கிருஷ்ணன் கொட்டாய் கிராமத்தில் அமைந்துள்ள குமகிரி மலையில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சண்முகநாதர் திருக்கோவிலில் 2ம் ஆண்டு தைப்பூஜை தேர் திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இத்திருவிழா கடந்த 26ம் தேதி கொடி ஏற்றத்துடன் தொடங்கி தொடர்ந்து பல்வேறு ஆன்மிக நிகழ்ச்சிகளுடன் நடைபெற்றது. தைப்பூஜை திருவிழாவை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் உள்ள முருகன் கோவில்களில் பக்தர்கள் காவடி எடுத்தும், அலகு குத்தியும் தங்களது நேர்த்திக் கடனை செலுத்தி வழிபட்டனர். இதன் ஒரு பகுதியாக குமகிரி மலை திருக்கோவிலில் நடைபெற்ற தேர்திருவிழாவில் ஏராளமான பக்தர்கள் பால்குடங்களுடன் ஊர்வலமாக வந்து சண்முகநாதர் சுவாமிக்கு அபிஷேகம் செய்து சிறப்பு பூஜைகளில் கலந்து கொண்டனர்.

மேலும் சில பக்தர்கள் சாட்டையால் அடி வாங்கியும் தங்களது நேர்த்திக் கடனை நிறைவேற்றினர். தொடர்ந்து ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சண்முகநாதர் சுவாமிக்கு சந்தனகாப்பு அணிவித்து சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பின்னர் சிறப்பு அலங்காரத்தில் காட்சியளித்த சுவாமியை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பக்தர்கள் தரிசனம் செய்து வழிபட்டனர். இவ்விழாவை முன்னிட்டு தமிழக காங்கிரஸ் கட்சியின் முன்னாள் மாவட்டத் தலை வரும், மாநில காங்கிரஸ் கட்சியின் பொதுக் குழு உறுப் பினருமான எல்.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் திருவிழாவிற்கு வருகை தந்த பக்தர்கள் அனைவருக்கும் மாபெரும் அன்னதானம் வழங்கப் பட்டது. விழாவிற்கான ஏற்பாடு களை செட்டிமரன்பட்டி கிருஷ்ணன் கொட்டாய் கிராமத்தைச் சேர்ந்த ஊர் கவுண்டர் உள்ளிட்ட கிராம மக்கள் சிறப்பாக செய்து இருந்தனர்.

## பழனி நகர்மன்ற கூட்டத்தில் அதிகாரிகள் சரியாக வேலை பார்க்கவில்லை விடுமுறை எடுக்கச் சொல்லும் நகர்மன்ற தலைவர்




திண்டுக்கல், பிப்.03-

திண்டுக்கல் மாவட்டம் பழனி நகராட்சியில் நகர்மன்ற கூட்டத்தொடர்கள் தலைவர் தலைமையில் ஆணையர் முன்னிலையில் நடைபெற்றது இதில் கோடைகால குடிநீர் வினியோகம் சாலைப் பணிகள் துப்புரவு பணிகள் மற்றும் வரிவிதிப்பு உள்ளிட்ட அடிப்படை வளர்ச்சி திட்டங்களை குறித்து விவாதிக்கப்பட்டது நகர் மன்ற தலைவர் பொதுமக்கள் குப்பைகள் சாக்கடை சுகாதாரம் போன்ற பிரச்சினைகளை அதிகாரிகள் கண்டுகொள்வதில்லை என புகார்கள் கூறிய வண்ணம் உள்ளனர் .ஆதலால் அதிகாரிகள் சரியாக வேலை பார்க்கவில்லை என்றால் விடுப்பு எடுத்து வீட்டுக்குச் சொல்லுங்கள் என கூறினார். மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து தாங்கள் பகுதிகளில் சாக்கடை பழுது அடைந்து மற்றும் சாலைகள் குண்டும் குழியுமாக உள்ளது மற்றும் சிவகிரி பெட்டியில் தொடர்ந்து தண்ணீர் பிரச்சனை ஏற்பட்டு வருகிறது பழனி பேருந்து நிலையத்தில் கழிப்பிட வசதி ஏற்பாடு செய்தும் இன்னும் திறக்கப்படவில்லை மற்றும் சுற்றுவட்டாரத்தில் சாலை ஓரங்களில் காய்ந்த மரங்கள் நீண்ட நாட்களாகவே உயிர்ச்சேதம் ஏற்படும் அபாயத்தில் உள்ளது அதை அகற்ற வேண்டும் என கோரிக்கையும் பாதாள சாக்கடை பணியாற்றும் அலுவலகம் மற்றும் தங்கி இருக்கும் ஊழியர்கள் அரசு ஆண்களில் மேல்நிலைப் வளாகத்தில் இருப்பதால் அதை உடனேஅகற்றி தர வேண்டும் என கூறினர் . பழனிவால் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான. தண்ணீர் .வீட்டு வரி. போன்றவைகளை எளிதாக கட்டுவதற்கு கியூ ஆர் கோடு கொண்டு வர வேண்டும் என பல கோரிக்கைகளை முன்வைத்துக் கூறினர்

## அகசிப்பள்ளி ஊராட்சியில் புதிய பல்நோக்கு கட்டிடம்: பூமி பூஜை - பொதுமக்கள் கோரிக்கைகளுக்கு எம்எல்ஏ உறுதி



கிருஷ்ணகிரி, பிப்.03-

கிருஷ்ணகிரி ஒன்றியம் அகசிப்பள்ளி ஊராட்சி ராயக்கோட்டையான் கொட்டாய் கிராமத்தில் புதிய பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கான பூமி பூஜை நிகழ்ச்சி நேற்று நடை பெற்றது. இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான அசோக் குமார் அவர்கள் கலந்து கொண்டு பூமி பூஜை செய்து பணிகளை துவக்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து அங்கு கூடியிருந்த பொதுமக்களிடம் அவர் நேரடியாக சந்தித்து, பகுதியின் அடிப்படை வசதிகள் மற்றும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்தார். அப்போது அங்கிருந்த பெண்கள் உள்ளிட்ட பொதுமக்கள், தங்களின் பகுதியில் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருவதாகவும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், வேலைக்குச் செல்லும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கிருஷ்ணகிரி-திண்டிவனம் தேசிய நெடுஞ்சாலையை தினசரி கடக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதாகவும் தெரிவித்தனர். தேசிய நெடுஞ்சாலையை கடக்கும் போது அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு வருவதால், உயிரிழப்புகள் மற்றும் காயங்கள் ஏற்படும் அபாயம் அதிகமாக இருப்பதாக அவர்கள் வேதனையுடன் கூறினர். குறிப்பாக பேருந்து நிறுத்தத்திலிருந்து குடியிருப்பு பகுதிக்கு செல்ல பாதுகாப்பான நடைபாதை இல்லாததால் மாணவ, மாணவிகள் மற்றும் முதியவர்கள் கடும் சிரமம் அடைந்து வருவதாகவும், எனவே பேருந்து நிறுத்தம் அருகே உயர்மட்ட மேம்பாலம் அமைத்து தர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த கோரிக்கைகளை கவனமாக கேட்டறிந்த சட்டமன்ற உறுப்பினர் அசோக் குமார் அவர்கள், இது பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பான முக்கியமான விஷயம் என குறிப்பிட்டார். இதுகுறித்து மாவட்ட நிர்வாக அதிகாரிகளுடன் உடனடியாக ஆலோசித்து, கூடிய விரைவில் உயர்மட்ட மேம் பாலம் அமைக்க தேவையான நடவடி க்கைகள் மேற்கொ ள்ளப்படும் என பொதுமக்களுக்கு உறுதியளித்தார்.

இந்த நிகழ்ச்சியில்நிகழ்ச்சியில் கிழக்கு ஒன்றிய செயலாளர் கன்னியப்பன், மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர் அணி ஆஜி, அம்மா பேரவை மாவட்ட இணைச் செயலாளர் தாபா வெங்கட்ராமன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டு திட்டத்தின் அவசியம் குறித்து பேசினர்.

மேலும் அம்மா பேரவை துணைச் செயலாளர் ரமேஷ், இளைஞர் அணி ஒன்றிய செயலாளர் ரமேஷ், சின்னசாமி, கோபி, மாது, திம்மராயன், குமார், கோவிந்தன், சின்ன கவுண்டர், காவேரி, கதிரேசன், முருகன், மந்திரி கோவிந்தசாமி, விக்ரம், மந்திரி திருப்பதி உள்ளிட்ட

உள்ளாட்சி பிரதிநிதிகள், கட்சி நிர்வாகிகள், ஊராட்சி உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ மாமன்னர் திருமலை நாயக்கர் 443 வது பிறந்த நாளை முன்னிட்டு திருமலை நாயக்கர் அரண்மனையில் அவரது திருவுவசிலைக்கு தமிழ்நாடு மகாஜன சங்க இளைஞரணி சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் நிகழ்வில் சன்னாசி ரத்தினவேல் ஜெகநாதன் மாவட்ட தலைவர் ராம்குமார் செயலாளர்அழகர்சாமி பொருளாளர் சுந்தர், ராம், சதீஷ்,வெங்கடேஷ், மணி, அருண், பாலசுப்பிரமணி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## மாவட்ட ஆட்சியரிடம் மனு



சிவகங்கை, பிப்.03-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் தாலுகா நாட்டரசன் கோட்டை பகுதியில் கருப்பையா என்பவர் தாங்கள் வசிக்கும் பகுதியில் வேறு ஊரை சார்ந்தவர்கள் அரசு இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டு தொந்தரவு செய்வதாக மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்திருந்தார் இந்த மனு குறித்து மாவட்ட ஆட்சியர் அனைத்து ஆவணங்களையும் ஆய்வு செய்து அப்பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை வட்டாட்சியர் மூலம் அகற்றுவார்கள் என்று கூறியிருந்த சூழ்நிலையில் வட்டாட்சியர் மற்றும் கௌரிப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் சம்பந்தப்பட்ட இடத்தை பார்த்து பார்வையிட்டு அரசு சொந்தமான இடத்தில் யாரும் அத்துமீறி ஆக்கிரமிக்க கூடாது என்று கூறியும் கேட்காமல் தனி நபர்கள் அந்த இடத்தில் வேலி பிடித்து ஆக்கிரமித்து உள்ளதாக கருப்பையா கூறினார் மேலும் இந்த இடத்தில் அரசு அப்பகுதியில் வாழ்பவர்களுக்கு சமுதாய கூடம் அல்லது பால்வாடி போன்ற கட்டிடங்களை அமைத்துக் கொடுத்தால் இப்பகுதியில் உள்ள மக்களுக்கு ஏதுவாக இருக்கும் என்றும் கருப்பையா தெரிவித்தார் இது குறித்து மாவட்ட நிர்வாகம் ஆக்கிரமிப்பு நிலங்களை அகற்றி பொதுமக்கள் பயன்பாட்டிற்காக ஆவண செய்ய வேண்டும் என்பதே அப்பகுதி உள்ள பொதுமக்கள் கோரிக்கையாக உள்ளது



■ மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் தனியார் வங்கியின் பங்களிப்பின் கீழ் புதிதாக வழங்கப்பட்ட பள்ளி பேருந்தை மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., கொடியசைத்து பயன்பாட்டிற்கு துவக்கி வைத்து மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடினார்கள் அருகில் கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன் , துணை ஆணையாளர் ஜெய்னுலாப்தீன் , கல்வி அலுவலர் மோகன் அவர்கள், ஐ.டி.பி.ஐ. வங்கி மதுரை முதுநிலை மண்டல பொது மேலாளர் நேபு தாமஸ் கௌசி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## காவேரிப்பட்டணத்தில் மாநில அளவிலான இரட்டையர் டென்னிஸ் போட்டி: சென்னை அணியினர் கோப்பையை வென்றனர்




கிருஷ்ணகிரி, பிப்.03-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் YRMC டென்னிஸ் கிளப் சார்பில் மாநில அளவிலான இரட்டையர் டென்னிஸ் போட்டி நடைப்பெற்றது. இப்போட்டிக்கு வழிகாட்டி குழு தலைவர்கள் பாரிவள்ளல், தணிகாசலம் ஆகியோர் முன்னிலை வகித்து போட்டியை துவக்கி வைத்தனர்.

தலைவர் நாகேந்திரன் செயலாளர் கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இப்போட்டியினை ஒருங்கினைப்பாளர்கள் சரவணன், தனசீலன், சத்தியமூர்த்தி ஆகியோர் ஏற்படு செய்திருந்தனர்.

இப்போட்டியில் சென்னை, கேரளா, ஆந்திரா, பெங்களூர், பாண்டிச்சேரி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து 25க்கும் மேற்பட்ட அணிகள் பங்கு பெற்றன. இதில் சென்னை நூங்கம்பாகம் அணியினர் முதல் பரிசும், இரண்டாம் பரிசினை சென்னை அண்ணாநகர் டென்னிஸ் கிளப் அணி வெற்றி பெற்றனர். வெற்றி பெற்ற அணியினருக்கு பரிசு தொகை மற்றும் வெற்றி கோப்பையை வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் நாகேந்திரன், கமலநாதன், மகாலட்சுமி சரவணன், சாந்தி மார்ட் சங்கர், பாரத், ராமன்,சக்தி, வேல், பிரபு, ஜெய்கணேஷ், விவேக், கமலநாதன், சதீஷ்,சக்தி, அரசு, சதீஷ் உள்ளிட்ட டென்னிஸ் கிளப் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## மானாமதுரை நகர் திமுக சார்பில் மாபெரும் வாலிபால் போட்டி

மானாமதுரை பிப்03-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகர திமுக சார்பில் திராவிடப் பொங்கல் விழா மற்றும் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு மாபெரும் கையுந்து பந்து விளையாட்டு போட்டி நடைபெற்றது.

நகர திமுக சுற்றுசூழல் அணி அமைப்பாளர் ச. விக்னேஷ்வரன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மானாமதுரை நகர்மன்றத் தலைவர், சட்டமன்ற மேனாள் உறுப்பினர் எஸ். மாரியப்பன் கென்னடி , நகரச் செயலாளர் க. பொன்னுச்சாமி ஆகியோர் கலந்து கொண்டு பௌட்டியைத் தொடங்கி வைத்தனர்.

மேலும் மாவட்ட திமுக சுற்றுசூழல் அணி அமைப்பாளர் எஸ். எஸ். ஏ. வல்லபாய் , மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே. எஸ். நாராயணன், மாவட்ட பிரதிநிதி ஜிம் மூர்த்தி , சுப. ம.பன்னீர்செல்வம் , தொகுதி திமுக ஐடி விங் ஒருங்கிணைப்பாளர் நகர்மன்ற உறுப்பினர் இந்துமதி திருமுருகன் ஆகியோர் கலந்து கொண்டு போட்டிகளைத் தொடங்கி வைத்தனர்.

மேலும் நகர்க்கழக திமுக நிர்வாகிகளான அவைத்தலைவர் ரவிச்சந்திரன் , அதியமான் பொன்னுச்சாமி , இராஜேஷ்குமார் , செல்லப்பாண்டி , தர்மா , அயன்ராஜ் , மாணவரணி கார்த்தி, செம்புக்குட்டி , இளைஞரணி பரத் ,திருமுருகன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை மானாமதுரை நகர் திமுக சுற்றுசூழல் அணி அமைப்பாளர் ச. விக்னேஷ்வரன் சிறப்பாக செய்திருந்தனர்.



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண்.54 காஜிமார் தெரு பகுதிகளில் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் ஆய்வு மேற்கொண்டு அப்பகுதி பொதுமக்களிடம் குறைகளை நேரில் கேட்டறிந்தார் அருகில் மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., மற்றும் மாநகராட்சி பொறியாளர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சேலம் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம் இணைந்து நடத்தும் சேலம் மண்டல அளவிலான தொழிற்பழகுநர் சேர்க்கை முகாம் ஓசூர் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் 06.02.2026 அன்று நடைபெறுவதையொட்டி, பொதுமக்கள், மாணவ, மாணவிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான விழிப்புணர்வு வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள் நேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கௌரிசங்கர், மாவட்ட திறன் பயிற்சி அலுவலர் பன்னீர் செல்வம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், அவர்கள் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைக்குறள், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் அபிநயா உள்ளிட்ட பலர் உள்ளனர்



# தமிழக வெற்றி கழகத்தின் 3வது ஆண்டு விழா கம்பத்தில் 2000 பேருக்கு பிரியாணி வழங்கப்பட்டது

கம்பம், பிப்.03-

தேனி மாவட்டம் கம்பம் நகரில் தமிழக வெற்றிக் கழகம் தொடங்கப்பட்டு மூன்றாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு தொண்டர்கள் சிறப்பான கொண்டாட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மதுரை மண்டல வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளர் சுபாஷ் சந்தர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், சுமார் 2000 பேருக்கு முட்டை பிரியாணி அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கம்பம் நகர செயலாளர்கள் சண்முகராஜா, சதீஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் நகர நிர்வாகிகள் முகேஷ் ராஜா, அபு, ஹரிஷ், அபினேஷ், ஆனந்தன், பிரபாவதி, வைத்தீஸ்வரி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். பங்கேற் பொதுமக்களும் கட்சியினரும் திரளாக கலந்து கொண்டு, விழாவை உற்சாகமாக கொண்டாடினர்.

# மன்னர் திருமலை நாயக்கர் பிறந்த நாள் விழா: தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்கம், ஆர்.எம்.ஆர். பாசறை சார்பில் நடந்தது

மதுரை, பிப்.03-

மன்னர் திருமலை நாயக்கரின் 443 வது பிறந்த நாள் விழா தமிழ் நாடு நாயுடு மகாஜன சங்கமும், ஆர்எம் ஆர் பாசறை இணைந்து நடத்தியது.விழாவிற்கு தமிழ் நாடு நாயுடு மகாஜன சங்க மாநில தலைவர் முத்துவேல் தலைமை தாங்கினார. தமிழக அரசின் முன்னாள் தலைமை செயலாளர் ராம் மோகன் ராவ் தலைமை தாங்கி மன்னர் திருமலை நாயக்கர் சிலைக்கு மாலை அணிவித்து ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கினார்



மாநில துணை செயலாளர், பிரபு நாயுடு, மாநில துணைதலைவர்கள் தேனிவீரராஜ், வகித்தனர் நாராயணசாமி ஆகியோர் முன்னிலை பொது செயலாளர் போஸ் சன்னாசி, ரத்தினவேல், சீனி வாசன், ஆகியோர் வரவேற்பு உரை ஆற்றினார்கள் விழாவில் அமைச்சர்கள் மூர்த்தி, பழனி வேல் தியாகராஜன், தளபதி எம்எல்ஏ, பூமிநாதன் எம் எல் ஏ,ஆகியோர்

மன்னர் திருமலை நாயக்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். சிறப்பு விருந்தினராக தேமுதிக இளைஞர் அணி செயலாளர் விஜயபிரபாகரன், மணிகண்டன், பாஜக சுதாகர் ரெட்டி ,ராமசீனிவாசன், கதலி நரசிங்க பெருமாள், மாறு சக்கரவர்த்திஆகியோர் கொண்டனர்விழாவில் சீனி வாசன் ஜெகநாதன் ஆகியோர் நன்றி கூறினார்விழாவில் முன்னாள் அமைச்சர்கள் செல்லூர்ராஜூ, கடம்பூர் ராஜு, ஆர் பி உதயகுமார், மாவட்ட செயலாளர் ராஜன் செல் லப்பா, எம் எல் ஏ பெரிய புள்ளான், முன்னாள் எம் எல்ஏ எஸ் எஸ் சரவணன் மற்றும்அதிமுகநிர்வாகிகள் தளபதி மாரியப்பன், நாகேந்திரன், தவெக வடக்கு மாவட்ட செயலாளர் விஜய் அன்பன் கல்லாணை, இளைஞர் அணி ஈஸ்வரன் உட் பட பலர் கலந்து கொண்டனர் ஏற்பாடுகளை இளைஞர் அணி நிர்வாகிகள் ராம் குமார், அழகர் சாமி, சுந்தர் ஆகியோர் செய்திருந்தனர்.



■ தேனி மாவட்ட காவல்துறையின் சார்பில், (RTOR - Refresher Training For Other Ranks) காவலர்களுக்கான திறன் மேம்பாட்டு மறு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. மேற்படி பயிற்சி வகுப்புகள், தேனி மாவட்டம் ஆயுதப்படை வளாகத்தில், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.B. சினேஹா ப்ரியா, தலைமையில் நடைபெற்றன. இப்பயிற்சி நிகழ்வில், தேனி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர்.முத்துக்குமார், காவல் துணை கண்காணிப்பாளர் DCRB.தேவராஜ், காவல் ஆய்வாளர்கள், சார்பு ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியின் போது, சட்ட ஒழுங்கு பராமரிப்பு, பொதுமக்களுடன் நட்பு முறையில் செயல்படுதல், அவசர கால நடவடிக்கைகள், மற்றும் சமகால காவல் பணிகளுக்குத் தேவையான புதுப்பிக்கப்பட்ட செயல்முறைகள் குறித்து விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன. இதன் மூலம் காவலர்களின் தொழில்முறை திறன், சட்ட அறிவு மற்றும் பணித் திறனை மேலும் மேம்படுத்துவது இப் பயிற்சியின் முக்கிய நோக்கமாக இருந்தது.



# தமிழக வெற்றி கழகம் - 3ஆம் ஆண்டு துவக்க நாள் விழா

படப்பை, பிப்.03-

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற தொகுதி தமிழக வெற்றி கழகம் மூன்றாம் ஆண்டு தொடக்க விழா வெகு விமர்சியாக நடைபெற்றது.

இந்த விழாவில் கட்சியின் கொள்கைகள் மற்றும் நோக்கங்களை முன்னெடுத்து செயல்பட உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. தொடகக விழாவை முன்னிட்டு விழாவை முன்னிட்டு 100 தூய்மை பணியாளர்களுக்கு அரிசி,புடவைகள்,300 கரும் மேற்பட்ட பெண்களுக்கு புடவைகள்,500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் பிகேபி.கோபிநாத், ஒரகடம் செல்வம், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பி.பிரகாஷ், காமேஷ், படப்பை ஜீவா, ஆரம்பாக்கம் ஜான், சிறு மாத்தூர் அசோக், படப்பை கிருபா, படப்பை ஜெய், சரத்குமார், செல்வம், ஜெகன், கமல் ஜெயராம், நாகேந்திரன் கார்த்திக் குணா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# அவதானப்பட்டியில் ரூ.12.70 லட்சத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை பர்கூர் எம்எல்ஏ திறந்து வைப்பு

கிருஷ்ணகிரி, பிப்.03-

கிருஷ்ணகிரி அருகே உள்ள அவதானப்பட்டி கிராமத்தில், அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.12.70 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பகுதி நேர நியாய விலைக் கடையை பர்கூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினரும், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளருமான தே.மதியழகன் எம்எல்ஏ அவர்கள் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றியம், பெரியமுத்தூர் ஊராட்சி, அவதானப்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த நியாய விலைக் கடை மூலம் பொதுமக்கள் அத்தியாவசியப் பொருட்களை எளிதாக பெற்றுக்கொள்ளும் வகையில் வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றிய செயலாளர் நாராயணன், திமுக மத்திய ஒன்றிய செயலாளர் விசிஎன்.மகேந்திரன், கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி, மாவட்ட துணைச் செயலாளர் கோவிந்தசாமி, பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், ஒன்றிய குழு துணைத் தலைவர் கவிதா பிரபாகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும் திமுக நிர்வாகிகள் சரவணன், ராமச்சந்திரன், வேலாயுதம், சிவா, மாதேஷ், மூர்த்தி, கௌரப்பன், செல்வி, வெங்கடேஷ் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் உடன் இருந்தனர்.



# கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா

கிருஷ்ணகிரி, பிப்.03-

கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், தமிழக அரசின் சார்பில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான தே.மதியழகன் எம்எல்ஏ அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்த கல்வியாண்டில் பள்ளியில் பயிலும் 370 மாணவர்களுக்கு ரூ.17.60 லட்சம் மதிப்பீட்டில் விலையில்லா மிதி வண்டிகள் வழங்கப்பட்டன. கிராமப்புற மற்றும் நகர்ப்புற மாணவர்கள் பள்ளிக்கு எளிதாகவும் பாதுகாப்பாகவும் செல்லும் வகையில் இந்த திட்டம் பெரிதும் உதவும் என எம்எல்ஏ தனது உரையில் தெரிவித்தார். மேலும் கல்வியே மாணவர்களின் எதிர்காலத்தை மாற்றும் சக்தி என்பதால், அரசு மாணவர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மதன்குமார், மாவட்ட கல்வி அலுவலர் கௌசர், பள்ளி தலைமை ஆசிரியர் ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினர்.

மேலும் கிருஷ் ணகிரி திமுக நகர பொறுப் பாளர்கள் அஸ்லம், வேலுமணி, மாவட்ட துணைச் செயலாளர் கோவிந் தசாமி, பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# வேலூர், நீலகிரி உள்ளிட்ட 6 மாவட்டங்களில் பிப்.5 வரை பனிமூட்டம் நிலவ வாய்ப்பு

சென்னை, பிப்.03-

தமிழகத்தில் கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, நீலகிரி மற்றும் திண்டுக்கல் ஆறு மாவட்டங்களில் பிப்.5 ம் தேதி வரை மிதமான பனிமூட்டம் நிலவ வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளி யிட்ட செய்திக் குறிப்பு: தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை (பிப்.3) வறண்ட வானிலை நிலவக்கூடும்.

தெற்கு கேரள கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்கிழக்கு அரபிக்கடல்



பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக 4ம் தேதி தென் தமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களிலும், 5ம் தேதி தென் தமிழகம், வட தமிழக கடலோர மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

இதர தமிழக பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 6 முதல் 8ம் தேதி வரை தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 31 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச வெப்பநிலை 24 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும். தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் பிப்.6ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கி.மீ. வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம். தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் ஊத்து, நாலுமுக்கில் தலா 2 செமீ, காக்காச்சி, மாஞ்சோலை, கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் ஆகிய இடங்களில் தலா 1 செமீ மழை பதிவாகியுள்ளது. தமிழகத்தில் கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, நீலகிரி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் பிப்.5 ம் தேதி வரை ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும் என்று செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



■ மாநில அளவில் நடைபெற்ற கலைத் திருவிழாவில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. அதில் சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அருகே உள்ள சாலை கிராமம் தூய மரியன்னை நடுநிலைப் பள்ளியில் நான்காம் வகுப்பு பயிலும் மாணவி அ வேத நடாலினா மாநில அளவில் களிமண் பொம்மைகள் செய்தல் போட்டியில் முதலிடம் பெற்று பரிசினை பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

# மதுரை மீனாட்சி அம்மன் தெப்பத்திருவிழா: அனுப்பானடி குடும்பனாருக்கு முதல் மரியாதையுடன் தொடக்கம்

மதுரை, பிப்.03-

மதுரை உலகப்புகழ் பெற்ற மீனாட்சி அம்மன் கோவில் தைப்பொங்கல் திருவிழாவினை முன்னிட்டு நடைபெறும் தெப்பத் திருவிழா, பாரம்பர்ய முறைப்படி அனுப்பானடி பகுதி மக்களுக்கு வழங்கப்படும் முதல் மரியாதையுடன் கோலா கலமாகத் தொடங்கியது.

மதுரையை அரசாளும் மீனாட்சி அம்மன் சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் மற்றும் ஆடித்திருவிழா போலவே, தை மாதத்தில் வரும் தெப்பத்திருவிழாவும் மிகவும் பிரசித்தி பெற்றது. இந்த விழாவின் ஒரு முக்கிய மரபாக, அனுப்பானடி தெய்வக்கண்ணி தெருவில் வசிக்கும் ஊர் குடும்பனாருக்கு (தேவேந்திர குல வேளாளர் சமூகத்தின் தலைவர்) கோவில் நிர்வாகம் சார்பில் முதல் மரியாதை



வழங்கப்படுகிறது.

வரலாற்றுப் பின்னணி மற்றும் நடைமுறை

மன்னர் திருமலை நாயக்கர் காலத்தில் வண்டியூர் தெப்பக்குளம் வெட்டப்பட்டபோது, அங்கிருந்த மண் எடுக்கப்பட்டு திருமலை நாயக்கர் மஹால் கட்டப்பட்டது. இந்த தெப்பத் திருவிழா பணிகளில் முக்கியப் பங்காற்றியதாலும், அந்தப் பகுதியின் பூர்வகுடி மக்கள் என்ற அடிப்படையிலும் அனுப்பானடி குடும்பனாருக்கு இந்தச் சிறப்பு வழங்கப்பட்டு வருகிறது.

* தெப்பத் திருவிழா தொடங்குவதற்கு முன்பாக, அனுப்பானடி தெய்வக்கண்ணி தெருவில் உள்ள குடும்பனார் வீட்டிற்கு மீனாட்சி அம்மன் சுந்தரேஸ்வரர் சார்பில் பரிவட்டம் மற்றும் பிரசாதங்கள் கொண்டு செல்லப்படும்.

* அவருக்கு முதல் மரியாதை செய்யப்பட்ட பின்னரே, தெப்பத்தில் சுவாமி எழுந்தருளும் நிகழ்வு முறைப்படி தொடங்கும்.

இந்தத் தொன்மையான மரபு இன்றும் மாறாமல் கடைப்பிடிக்கப்பட்டு வருவது, மதுரை மக்களின் சமூக ஒற்றுமைக்கும் கலாசாரப் பிணைப்பிற்கும் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. இதனைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ, வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தெப்பத்தில் மீனாட்சி அம்மனும் சுந்தரேஸ்வரரும் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.





# செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் வள்ளலார் தைப்பூச ஜோதி தரிசன நான்காம் ஆண்டு பெருவிழா

குரோம்பேட்டை, பிப்.03-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் வள்ளலார் தைப்பூச ஜோதி தரிசன நான்காம் ஆண்டு பெருவிழா குரோம்பேட்டை ஜிஎஸ்டி ரோட்டில் மகிழ்வித்து மகிழ் அறக்கட்டையில் சார்பில் நிறுவனர் பி.எஸ்.கங்கா என்கிற கங்காதரன் தலைமையில் டி.ரமேஷ், என்.ராஜன், பி.சதீஷ், ஜே.சி.கரண், கே.எஸ்.ரவிசங்கர், ஜி.வசீகர், பி.வழக்கறிஞர் சீனிவாசகுமார், சுதாபாண்டியன், குமார் ஆகியோர் முன்னிலை சுத்த சன்மார்க்க கொடியேற்றம் அருட்பெருஞ்ஜோதி ஏற்றப்பட்டது அதனை தொடர்ந்து குரோம்பேட்டை ஜிஎஸ்டி ரோடில் மூன்று வேலையும் சுமார் 2000 மேற்பட்ட பொது மக்களுக்கு மாபெரும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக தமிழக அரசு அதிகாரிகள் டாக்டர் ஹேமலதா, பிரேமா கங்கா, ஓம் சக்தி டிம்பர் உரிமையாளர் டி.ரமேஷ், ஆனந்தா திருமண மாளிகை உரிமையாளர் சிவி.ராஜகோபால், ராஜன், புறப்பட்டு ராம் ஷோரூம் உரிமையாளர் சாந்தி லால் நகர், தமிழ் குடிமகன், மகிழ்வித்து மகிழ் அறக்கட்டளையின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





# செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் தாம்பரம் மேற்கு பகுதி 62வது வட்ட தி.மு.க அலுவலகம் திறப்பு விழா

தாம்பரம், பிப்.03-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் தாம்பரம் மேற்கு பகுதி 62வது வட்ட தி.மு.க சார்பில் 5வது மண்டல குழுத்தலைவர், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர், எஸ்.இந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற 62வது வட்ட தி.மு.க. அலுவலகம் திறப்பு விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனை கூட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்ஆர்.ராஜா அவர்கள் சிறுபுரையாற்றி கிரிக்கெட் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகள் மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் 4வது மண்டல குழுத்தலைவர் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ், தலைமை கழக பேச்சாளர் கி.வேல்மணி, மாமன்ற உறுப்பினர்கள் ரமணி ஆதிமூலம், ஜோதி குமார், கொடி தாமோதரன், 62வது வட்ட கழக செயலாளர் கு.பிரபாகரன், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் கார்த்திக், சிவசுப்பிரமணியன், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

# சிவகங்கையில் 'பேக் டு ஒயிட்' (BACK2WHITE) அதிநவீன சலவையகம் திறப்பு: துணிகளுக்குப் புதிய பொலிவு

சிவகங்கை, பிப்.03-

சிவகங்கை காந்தி வீதியில், அதிநவீன தொழில் முறையில் ஆடைகளைத் தூய்மைப்படுத்தும் 'பேக் டு ஒயிட் லோன்றி சர்வீசஸ்' (BACK2WHITE LAUNDRY SERVICES) என்ற புதிய நிறுவனம் கடந்த (01.02.2026) தனது சேவையைத் தொடங்கியது. "வெண்மையைக் கொண்டாடுவோம்" என்ற தாரக மந்திரத்துடன் இந்தச் சலவையகம் துவங்கப்பட்டுள்ளது.

வழங்கப்பாரும் சேவைகள்:

இந்தச் சலவையகத்தில் ஆடைகளைத் துவைத்தல் (Washing), டிரை கிளீனிங் (Dry Cleaning), ஸ்டீம் ஐயனிங் (Steam Ironing) மற்றும் கஞ்சி போடுதல் (Starching) போன்ற அனைத்துச் சேவைகளும் மிகவும் சுகாதாரமான முறையில் செய்து தரப்படுகின்றன.

சிறப்பம்சங்கள்:

* புத்தாடை மணம்: துணிகள் அனைத்தும் புத்தம் புதிது போன்ற தோற்றத்தையும், நறுமணத்தையும் பெறும் வகையில் கையாளப்படுகின்றன.

* பக்காவான கஞ்சி முறை: வேஷ்டி மற்றும் சட்டைகளுக்கு மொடமொடப்பான தோற்றம் தரும் வகையில் மிகச்சிறந்த முறையில் கஞ்சி போடப்படுகிறது.




* அனைத்து வகையிலான ஆடைகள்: சாதாரண சட்டைகள் முதல் பட்டுச் சேலைகள், பிளேசர், குர்தி, திருமண உடைகள், பார்ட்டி உடைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் கம்பளிகள் வரை அனைத்தும் கவனமாகச் சலவை செய்யப்படுகின்றன.

முகவரி:

எண்: 325/1, காந்தி வீதி,

பூர்விகா ஷோரூம் அருகில்,

சிவகங்கை.

தொடர்புக்கு: 9342777833

"மொத்தமா கொண்டு வாங்கஞ் சுத்தமா கொண்டு போங்க!" என்ற அழைப்புடன், குறைந்த நேரத்தில் தரமான சேவையை வழங்கத் தாங்கள் தயாராக இருப்பதாக நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.



# சாலைகிராமத்தில் புதிய பேருந்து நிலையம், மருத்துவமனைக் கட்டடங்களை ஆய்வு செய்து பார்வையிட்ட சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார்


இளையான்குடி, பிப். 03-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அருகே சுமார் 1.36 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட சாலைகிராமம் பேருந்து நிலையம் மற்றும் பொதுசுகாதாரத்துறை மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ ஐம்பது லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களை அன்மையில் சிவகங்கை மாவட்டத்திற்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, வேளான் கல்லூரி மற்றும் சட்டக்கல்லூரி திறப்பு விழாவிற்காக வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இதனைடுத்து தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் ஆ.தமிழரசி ரவிக்குமார் சாலைகிராமம் சென்று புதிய பேருந்து நிலையம், மற்றும் மருத்துவமனை ஆய்வகக்கட்டடங்களை பார்வையிட்டார்.

இந்த நிகழ்ச்சியின் போது இளையான்குடி தெற்கு ஒன்றிய செயலாளர் ஆறு. செல்வராசன், சாலைகிராமம் திமுக செயலாளர் நைனா முகமது , தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தனசேகரன் , அவைத்தலைவர் கணேசன் , துணைச் செயலாளர் கஸ்பார் , துகவூர் போஸ் , சகுபர் சாதிக் , நிர்வாகிகளான பாலமுருகன், நல்லகனி , கபில்மனோஜ் , கரீம் , ரவிச்சந்திரன் , பூலாங்குடி மைக்கேல்ராஜ் , கழக மூத்த முன்னோடி அடைக்கலம் , ஐடி விங் ஆரோண் கிங் கிரேஸ் , கார்த்தி உள்ளிட்ட நிர்வாகிகளும், இளையான்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் வே. தமிழ்மாறன் , கண்ணமங்கலம் கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர் சுப. தமிழரசன் , மாவட்ட விவசாய அணி காளிமுத்து உள்ளிட்ட போக்குவரத்துத் துறை ஊழியர்கள், மருத்துவத்துறை மருத்துவர்கள், பணியாளர்கள் ,ஏராளமான நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டார்.





# திருத்தணி முருகன் கோவிலில் தைப்பூசத் திருவிழா: 'அரோகரா' முழக்கத்துடன் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்தனர்

திருத்தணி, பிப்.03-

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் ஐந்தாம் படை வீடாகத் திகழும் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக் கோவிலில், தைப்பூசத் திருவிழா வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது.

சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்காரம்

தைப்பூசத்தையொட்டி, அதிகாலை முதலே கோவில் நடை திறக்கப்பட்டு, மூலவருக்குப் பால், பன்னீர் உள்ளிட்ட நறுமணப் பொருட்களால் சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றன. பின்னர், முருகப்பெருமானுக்கு சந்தனக் காப்பு இடப்பட்டு, தங்கக் கிரீடம் மற்றும் வைர ஆபரணங்கள் அணிவிக்கப்பட்டு மகா தீபாராதனை காட்டப்பட்டது.

அலைமோதும் பக்தர் கூட்டம்

இவ்விழாவில் பங்கேற்க சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், ராணிப்பேட்டை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், அண்டை மாநிலங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திருத்தணியில் குவிந்துள்ளனர்.

* மாலை அணிந்து விரதமிருந்த பக்தர்கள், "அரோகரா... அரோகரா..." எனப் பக்தி முழக்கமிட்டபடி மலைக்கோவிலுக்குச் சென்றனர்.

* பக்தர்களின் வருகை அதிகரிப்பால் மலைக்கோவில் வளாகம் முழுவதும் மக்கள் வெள்ளமாகக் காட்சியளிக்கிறது.

தரிசன நேரம்

கூட்ட நெரிசலைக் கருத்தில் கொண்டு தரிசனத்திற்குச் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

* ரூ.100 கட்டண தரிசனம்: பக்தர்கள் சுமார் 2 மணி நேரம் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

* பொது தரிசனம்: பொது வழியில் வரும் பக்தர்கள் 3 மணி நேரத்திற்கு மேலாகக் காத்திருந்து முருகப்பெருமானை வழிபட்டனர்.

வாகனக் கட்டுப்பாடு மற்றும் இலவச பேருந்து வசதி

போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு, மலைப்பாதையில் கார், வேன் மற்றும் இருசக்கர வாகனங்கள் செல்லக் காவல் துறையினர் தடை விதித்துள்ளனர். பக்தர்களின் வசதிக்காகக் கோவில் நிர்வாகம் சார்பில் 15 இலவசப் பேருந்துகள் அடிவாரத்திலிருந்து மலைக்கோவிலுக்குத் தொடர்ந்து இயக்கப்பட்டது.

வெள்ளி மயில் வாகன உலா

தைப்பூச விழாவின் முக்கிய நிகழ்வாக, மாலை வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான் வெள்ளி மயில் வாகனத்தில் எழுந்தருளி மாடவீதிகளில் உலா வந்து பக்தர்களுக்குக் காட்சியளித்தார். இதற்கான பாதுகாப்புப் பணிகளில் ஏராளமான காவல்துறையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161